# SG Digital

Grab Transport பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

Grab பலவகையான பயணத் தெரிவுகளைப் பயணிகளுக்கு வழங்குகிறது. சிறு பிள்ளைகளுக்கு உகந்த வாகனங்கள், சக்கர நாற்காலிகளை ஏற்றக்கூடிய வாகனங்கள், செல்லப்பிராணிகளுக்கு உகந்த வாகனங்கள் என பல உள்ளன.

## படிநிலை 1 Grab செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **Grab செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. அண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

## படிநிலை 2 Grab சேவைக்குப் பதிவு செய்யுங்கள்




3. "**New to Grab? Sign up!**" மீது தட்டி, ஒரு கணக்கை உருவாக்குங்கள்.




4. உங்கள் கைப்பேசி எண்ணை நிரப்புங்கள். உங்கள் கணக்கைச் செயல்படுத்த, கைப்பேசி எண்ணுக்கு 6-இலக்கக் குறியீடு அனுப்பி வைக்கப்படும்.




5. உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 6-இலக்கக் குறியீட்டை நிரப்புங்கள்.




6. பயணப்பதிவு செய்வதைத் தொடங்க '**Transport**' மீது தட்டுங்கள்.

## படிநிலை 3 Grab செயலி வாயிலாகப் பயணப்பதிவு செய்யுங்கள்




7. நீங்கள் செல்ல வேண்டிய இடத்தைக் கட்டத்தில் நிரப்புங்கள். நீங்கள் இறங்க விரும்பும் இடத்தைத் தேர்ந்தெடுங்கள்.




8. உங்களை ஏற்றிக்கொள்ள வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, '**Confirm Pick-Up**' மீது தட்டுங்கள்.




9. '**View All**' மீது தட்டி, நீங்கள் விரும்பும் பயணத்தைத் தேர்ந்தெடுங்கள். அனைத்து தெரிவுகளுக்கும் கட்டணமும் உத்தேசப் பயண நேரமும் காட்டப்படும்.




10. நீங்கள் விரும்பும் கட்டணமுறையைத் தேர்ந்தெடுங்கள் – ரொக்கம், ரொக்கக்கழிவு அட்டை அல்லது GrabPay.




11. நீங்கள் விரும்பும் பயணத்தையும் கட்டணமுறையையும் தேர்ந்தெடுத்தவுடன், '**Book**'மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- கட்டணங்களை மேலும் பாதுகாப்பான முறையில் செலுத்த, 6-இலக்க GrabPay மறைஎண்ணை அமைத்திடுங்கள்.
- ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல், கடவுச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்கள் எதனையும் எவரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- மூன்றாம் தரப்பு இணையத்தளங்களிடம் அல்லது Grab என்று சொல்லிக்கொள்ளும் செயலிகளிடம் தனிப்பட்ட விவரங்கள் எதனையும் கொடுக்காதீர்கள். சரிபார்க்கும் நோக்கத்திற்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் Grab செயலியிலேயே கோரப்படும்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY